7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*22. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையக் கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் ஒழுங்குமுறை விதிகளில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் திருத்தங்கள் செய்தது குறித்து எரிசக்தித் துறையிடமிருந்து வரப்பெற்ற 4–2–2011 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./*F&F*/4/2–6–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*23. தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பு மற்றும் தமிழ்நாடு மின் பகிர்மான விதித்தொகுப்பு ஆகியவற்றிற்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் திருத்தங்கள் செய்தது குறித்து எரிசக்தித் துறையிடமிருந்து முறையே வரப்பெற்ற 14–3–2011 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./*SC*/7–23 மற்றும் 14–3–2011 ஆம் நாளிட்ட எண் தமி.ஒ.ஆ./*DC*/8–14–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*24. 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (பல்லாண்டுக்கான மின்கட்டண வீதத்தின்படி மாநிலத்திற்குள் மின்செலுத்தல்/மின் பகிர்மானத்திற்கான மின்கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகள் மற்றும் தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பு ஆகியவற்றிற்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் திருத்தங்கள் செய்தது குறித்து எரிசக்தித் துறையிடமிருந்து முறையே வரப்பெற்ற 28–2–2011 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./ப.ஆ.மி(*MYT*)/18–2 மற்றும் 21–2–2011 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./*SC*/7–22–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

25. தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் திருத்தங்கள் செய்தது குறித்து எரிசக்தித் துறையிடமிருந்து வரப்பெற்ற

18–3–2011 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./SC/7–25–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

26. காஞ்சிபுரம், தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர்கள் இணையத்தால் (டான்சில்க்), 2005–2006 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய கூடுதல் விற்பனை வரி மற்றும் அபராதத் தொகை ஆகியவற்றை தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (டி2) துறையின் 2–8–2011 ஆம் நாளிட்ட (2டி) 116 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

27. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

24. மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012–2013. (தமிழ், ஆங்கிலம்)

25. மானியக் கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012–2013. (தமிழ், ஆங்கிலம்)